கீதையும் குறளும்

வேதங்கள் நாம் இன்ன செய்யவேண்டும் இன்ன செய்யக்கூடாது என்பதைப் போதிக்கின்றன. அவற்றின்படி நடந்தால் நாம் நாடிய பொருளைப் பெறலாம். நம் மனதும் தூய்மை பெற்று, நற்காரியங்களிலே ஈடுபடும். கடவுள் எங்கும் வியாபித்திருக்கிறார். ஆகையால் எவ்வுயிர்க்கும் நன்மை பயப்பதே அறிவுடையோரின் செயலாகும். அதனால், ஈசுவரகிருபைக்கு நாம் பாத்திரமாவோம். ஈசுவரகிருபையைப் பெறவே, நாம் ஆத்ம ஞானிகளாகி ஜன்ம ஸம்ஸாரபந்தத்தினின்று விடுதலை பெற்றுப் பேரின்பமெய்துவோம். இது தான் வேதங்கள் நமக்குச் செய்யும் உபதேசம். ஈசுவரனுடைய தன்மையைப் பலவாக உவமைகளையும் கதைகளையும் கூறி நமக்குத் தெளிவாக விளக்குவன உபநிடதங்களாம். இந்த உபநிடதப் பொருளை வினவிடை ரூபமாய் ஐயந்திரிபுற விளக்கும் நூலே பகவத்கீதை என்பது.

திருக்குறள் என்பது அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்று புருஷார்த்தங்களையும் பல அதிகாரங்களாக வகுத்துக்கொண்டு கூறுகின்ற தமிழ்நூல். நூலின் தொடக்கத்திலே பாயிரமாக, கடவுளுக்கும் உலகத்திற்குமுள்ள தொடர்பைக்கூறி, வீடு பெறுதற்குரிய உபாயத்தையும் வீடுபேற்றின் இயல்பையும் கூறுகின்றது.

இவ்வாறு தரும சாஸ்திரம், அர்த்த சாஸ்திரம், காம சாஸ்திரம் ஆகிய நூற்பொருளையெல்லாம்

மூவகையாகப் பாகுபடுத்திக்கொண்டு விளங்கும் திருக்குறளுக்கும், மோக்ஷோபாயங்களைக் கர்ம யோகம், பக்தியோகம், ஞானயோகம் என்று பாகு படுத்திக்கூறும் ஸ்ரீ பகவத்கீதைக்கும், மேலெழுந்த வாரியாகப் பார்த்தால், யாதொரு சம்பந்தமும் இருப் பதாகத் தோன்ருது. ஆயினும், இரு நூல்களும் கையாண்டமுறை வேறுபடினும், அவை விளக்கப் புகுந்த தத்துவமும் ஒன்றேயாம்; அவை நமக்குக் காட்டும் வழியும் ஒன்றேயாம். இதுபற்றியே ஸ்ரீபக வத்கீதையை வேதத்தினுட்பொருள் என்றும் திருக்குறளைத் தமிழ் வேதம் என்றும் கூறுகிறோம். வடமொழி—தமிழ் ஆகிய உபயவேதமும் ஒரே அங் கத்தையுடையன. இவ்வொற்றுமையின் அம்சங் களில் என் சிற்றறிவினுற்கண்ட சிலவற்றை உங் கள் முன் காட்டித் தருவேன்.

ஸ்ரீ கீதையில் பகவான் முடிவாகக்கூறிய பொருளைத் திருவள்ளுவர் தம்முடைய நூலின் தொடக்கத்திலேயே ஒரு முறைக்குப் பன்முறை யாகக் கூறுகிருர்.

सर्वधर्मान् परित्यज्य मामेकं शरणं व्रज ।
अहं त्वा सर्वपापेभ्यो मोक्षयिष्यामि मा शुचः ॥

என்பது பகவத் வசனம்.

(1) பகவான் யார்?

अहं आदिश्च मध्यं च भूतानामन्त एव च ।

என்கிறது கீதை.

"ஆதிபகவன் முதற்றே யுலகு" என்பது குறள்; இவற்றையெல்லாம் தோற்றுவித்தவனும் அவனே.

காப்போனும் அவனே; இறுதியில் விடுவிப்போனும் அவனே என்பது இதன் பொருள்.

(2) மோக்ஷம் என்பது என்ன?

எல்லாத் துன்பங்களினின்றும் விடுதலை பெறுவதே மோக்ஷம்.

सर्वपापेभ्यो मोक्षयिष्यामि मा शुचः என்பது கீதை? "யாண்டும் இடும்பை இல" என்பது குறள்.

(3) மோக்ஷம் பெறுவதற்கு என்ன செய்ய வேண்டும்?

பகவானுடைய சரணாரவிந்தங்களைத் தொழுதெழ வேண்டும். **मामेकं शरणं व्रज** என்பது கீதை. "மலர்மிசை யேகினான் மாணடி சேர்", "வேண்டுதல் வேண்டாமையிலான் அடிசேர்", "இறைவன் பொருள் சேர் புகழ் புரி", "தனக்குவமை யில்லா தான்றாள் சேர்', "அறவாழியந்தணன் தாள் சேர்", "எண்குணத்தான் தாளைத் தலையால் வணங்கு", "இறைவனடி சேர்", "வாலறிவன் நற்றாள் தொழூ" என்பன திருக்குறள்.

(4) வேறு வழி இல்லையா மோக்ஷம் பெறுவதற்கு?

இல்லையென்றே சொல்லலாம். யாதொரு தருமாசரணமும் வழியாக மாட்டாது. எல்லாத் தருமங்களின்படி நடந்துகொண்டாலுமே கடவுளின் அருளில்லையேல் மனக்கவலை மாறாது.

सर्वधर्मान् परित्यज्य मामेकं शरणं व्रज என்பது கீதை. एकं என்பது தனக்குவமையில்லாதவன் என்பதைக்

குறிப்பிடுகின்றது. தனக்குவமையில்லாதான் தாள் சேர்ந்தார்க் கல்லால் மனக்கவலை மாற்றல் அரிது. 'அறவாழி அந்தணன்தாள் சேர்ந்தார்க்கல்லால் பிறவாழி நீந்தல் அரிது.' அவன் அறவன்; தரும ஸ்வரூபமாக விளங்குவது அவன் கையிலேந்திய திருச்சக்கரம். அந்த ஆழிப்படையுடையவன் அந்தணன்; எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகுவோன். அவனைத் திருவடி தொழுதால், நாம் செய்பவற்றையெல்லாம் அறமாகவேகொண்டு நமக்கு அருள்புரிவான். இறைவனடி சேர்ந்தால் மட்டுமே பிறவிப் பெருங்கடலை நீந்துவோமாவோம். திருவடியாகிய புணையைப் பெறுதவர் பிறவிப் பெருங்கடலை நீந்திச்சென்று கரையேற முடியாது.

(5) அந்த ஈச்வரன் எங்கே இருக்கிறுன்?

ईश्वरः सर्वभूतानां हृद्देशेऽर्जुन तिष्ठति ।
भ्रामयन् सर्वभूतानि यन्त्रारूढानि मायया ॥
तमेव शरणं गच्छ सर्वभावेन भारत ।
तत्प्रसादात्परां शान्तिं स्थानं प्राप्स्यसि शाश्वतम् ॥

என்று ஸ்ரீ கீதை விடை பகர்கின்றது. திருக்குறளும், "மலர்மிசையேகினன் மாணடி சேர்ந்தார், நிலமிசை நீடுவாழ்வார்" என்று அறுதியிடுகின்றது. உயிர்களையெல்லாம் காப்பதற்காகவே இணையற்ற இணையடிகள் நோவ அவ்வுயிர்களின் மனத்திடர்களிலே வாழ வல்லானய் வந்து ஸ்திரப்பிரதிஷ்டனய் இருக்கிறுன். அத்தகைய மாட்சிமையுடைய

திருவடிகளிலே சரண்புகுந்தவர்கள் நிலமிசை நீடு வாழ்வார்கள். சாச்வதமான ஸ்தானத்தைப் பெற்று பரம சாந்தமூர்த்திகளாய் விளங்குவார்கள்.

(6) அடிசேர்தல் என்றால் என்ன?

எப்பொழுதும் இறைவனுடைய புகழைப் பாடிப் பக்தி செய்வதே அடிசேர்வதாகும்.

भक्त्या त्वनन्यया शक्य अहमेवंविधोर्जुन ।
ज्ञातुं द्रष्टुं च तत्त्वेन प्रवेष्टुं च परन्तप ॥

என்பது ஸ்ரீ கீதை.

"வேத வசனங்களாலோ தவத்தாலோ ஈகையாலோ வேள்வியாலோ என்னைக் காண இயலாது. வேறு அறியாத பக்தியாலோ என்னை அறிவதற்கும் காண்பதற்கும் என்னுட் புகுந்து ஒன்றுவதற்கும் இயலும். இது என் இயல்பு" என்று முடிவு கட்டுகிறார் கிருஷ்ண பகவான்.

இது பக்ஷபாதமன்று;

समोऽहं सर्वभूतेषु न मे द्वेष्योऽस्ति न प्रियः ।
ये भजन्ति तु मां भक्त्या मयि ते तेषु चाप्यहम् ॥

"வேண்டுதல் வேண்டாமையிலான்" என்பது குறள். ஆயினும் பகவான் நச்சினார்க்கினியன். அவனடி சேர்ந்தார்க்கு, "யாண்டும் இடும்பை இல" என்று குறள் பறையடிக்கின்றது. **कौन्तेय प्रतिजानीहि न मे भक्तः प्रणश्यति** "என் பக்தன் நாசமுறான்" என்று பறையடிப்பாய், அத்தைமகனே!" என்கிறார் கிருஷ்ண பகவான்.

அடி சேர்வோர் நான்கு வகையினர்.

चतुर्विधा भजन्ते मां जनाः सुकृतिनोऽर्जुन ।
आर्तो जिज्ञासुरर्थार्थी ज्ञानी च भरतर्षभ ॥

என்பது பகவத் வசனம்.

இருவினைப் பயனையும் நுகர்ந்து துன்புறுவோன் ஆர்த்தன். இறைவனைத் துதிப்பதாலேயே இவனைப் பீடிக்கும் இருவினைப் பயனும் விலகும் என்பர் திருவள்ளுவர்.

"இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள் சேர் புகழ் புரிந்தார் மாட்டு."

கடவுளின் தத்துவத்தை உணர்ந்த மெய்ஞ் ஞானிகளும் ஞானமயனான பரம்பொருளின் ஞானவடிவான திருவடியினைச் சேர்ந்தோர் ஆவர். அவர்கள் அந்த ஞானத்தாலே எல்லாவுயிர்களையும் தன்னிடத்திலே காண்கிறார்கள். அதனாலேயே பகவானிடத்திலும் எல்லாவுயிர்களையும் காண்கிறார்கள்.

यज्ज्ञात्वा न पुनर्मोहमेवं यास्यसि पाण्डव ।
येन भूतान्यशेषेण द्रक्ष्यस्यात्मन्यथो मयि ॥
अपि चेदसि पापेभ्यः सर्वेभ्यः पापकृत्तमः ।
सर्वं ज्ञानप्लवेनैव वृजिनं सन्तरिष्यसि ॥

IV 35—36

கற்பதால் உண்டாகும் ஞானம் என்ன பயனைத்தருவது என்றால், ஞானமயனான பரமனுடைய திருவடியாகிய புணை பெற்று எல்லாவுயிர்

களும் பிறவிப் பெருங்கடலை நீந்திக் கரையேறு கின்றன என்று அறிந்து அத்திருவடிகளைப் புணை யாகப் பெறும் பாக்கியத்தைத் தருகின்றது என்பர் ஆசிரியர் திருவள்ளுவர்.

"கற்றதனாலாய பயன் என் கொல் வாலறிவன்
நற்றாள் தொழா அர் எனின்."

(7) திருவடி சேர்வதற்கு வழி எது?

அவனவனுடைய பிறப்பு, வளர்ப்பு, சூழ்நிலை முதலியவற்றிற்கேற்ப அவன் முன்னோர் கையாண்டு வந்த பழக்க வழக்கங்களைக் கைக் கொண்டு, ஐம்பொறிகளையும் அடக்கி, அவாவினை அறுத்து, தூயவுள்ளத்தினனாக ஒழுகுவதே திருவடி சேர்வதற்கு உபாயமாம்.

"பொறிவாயிலைந் தவித்தான் பொய் தீரொழுக்க
நெறிநின்றார் நீடுவாழ்வார்."

என்பது குறள். இதனையே

"ஒருமையுளாமை போலைந் தடக்கலாற்றின்
எழுமையு மேமாப் புடைத்து."

என்னுங் குறள் வற்புறுத்துகின்றது. கீதையும்

यदा संहरते चायं कूर्मोऽङ्गानीव सर्वशः ।
इन्द्रियाणीन्द्रियार्थेभ्यस्तस्य प्रज्ञा प्रतिष्ठिता ॥

என்று கூறுகின்றது.

அவாவினை அறவே அறுத்தல் வேண்டும்.

काम एष क्रोध एष रजोगुणसमुद्भवः ।
महाशनो महापाप्मा विद्ध्येनमिह वैरिणम् ॥

तस्मात्त्वमिन्द्रियाण्यादौ नियम्य भरतर्षभ ।
पाप्मानं प्रजहि ह्येनं ज्ञानविज्ञाननाशनम् ॥
3—41

"அவாவென்ப வெல்லா வுயிர்க்குமெஞ் ஞான்றும்
தவாஅ ப்பிறப்பீனும் வித்து."

"வேண்டாமை யன்ன விழுச்செல்வம் ஈண்டில்லை
யாண்டும் அஃதொப்ப தில்."

"அவாவில்லார்க் கில்லாகுந் துன்பம்; அஃதுண் டேல்
தவாஅது மேன்மேல் வரும்."

என்பவை குறள்.

"அவா அற்றுப்போனல், மனத்தூய்மை தானே வரும்" என்பதையும் திருக்குறள் விளக்குகின்றது "தூஉய்மை என்பது அவாவின்மை."

அவாவற்ற நிலையே முக்தி நிலை.

विगतेच्छा भयक्रोधो यः सदा मुक्त एव सः ॥

"ஆரா வியற்கை யவாநீப்பின் அந்நிலையே
பேரா வியற்கை தரும்."

அவா பெரிது முடையவன் அவாவற்றவன் போல நடித்தல் பொய்யொழுக்கமாகும். மனத்திலே அவாவினுக்கு இடங்கொடுத்து கர்மேந்திரியங்களை மட்டும் அடக்குவோன் பொய் யொழுக்க முடையோன் ஆவான்.

कर्मेन्द्रियाणि संयम्य य आस्ते मनसा स्मरन् ।
इन्द्रियार्थान्विमूढात्मा मिथ्याचारः स उच्यते ॥ 3-6.

மனம் சலிப்பது இயல்பு. அதனை அப்பியாசத்தாலும் வைராக்கியத்தாலும் சிறிது சிறிதாக அடக்குதல் வேண்டும்.

असंशयं महाबाहो मनो दुर्निग्रहं चलम् ।
अभ्यासेन तु कन्तेय वैराग्येण च गृह्यते ॥

என்று பகவானே ஒப்புக் கொள்ளுகிறார். வைராக்கியம் எப்படி ஏற்படும் என்றால் குறளாசிரியர் அதற்கு விடை பகர்கிறார் :

"பற்றுக பற்றற்றான் பற்றினை ; அப்பற்றைப்
பற்றுக பற்றுவிடற்கு."

பகவானிடத்தில் பக்தி செலுத்துவதே வைராக்கியம் பெறுவதற்கு உபாயமாகும். "மீண்டும் மீண்டும் மனத்தை அடக்க முயலவேண்டும் என்கிறீர்களே, முதன் முயற்சியிலே இடர்ப்பட்டு வழுவி அதோகதி யாகிவிட்டால் மீண்டும் முயல்வது எப்படி" என்கிறான் அர்ச்சுனன். அதற்கு பகவான்

न हि कल्याणकृत्कश्चिद्दुर्गतिं तात गच्छति ।

என்று விடை கூறித் தைரியப்படுத்துகிறார். அவாவின்மை உண்டாயின், அவரவர்களுக்கு விதிக்கப்பட்டு அவ்வவர் வமிசத்துப் பெரியோர்கள் ஆசரித்த பழக்க வழக்கங்களின்படி நடப்பது எளிதாகும். தான் செய்யும் வினையின் பயனை நுகர்தற்கு விருப்பமும் இராது. அத்தகையோர் கர்ம பலனைக் கருதாது தமக்குரிய காரியங்களைச் செய்வார்கள். அவ்வாறு காரியஞ்செய்வது அரிதாதலின்,

"செயற்கரிய செய்வார் பெரியர்; சிறியோர்
செயற்கரிய செய்கலா தார்" என்று திருக்குறள் கூறுகின்றது. அவனே உண்மைச் சன்னியாசி என்று ஸ்ரீ கீதை வற்புறுத்துகின்றது.

अनाश्रितः कर्मफलं कार्यं कर्म करोति यः ।

स सन्यासी च योगी च न निरग्निर्नचाक्रियः ॥

அத்தகையோரே உண்மையிலே தவஞ் செய்வோர்கள். ஊன்வாட உண்ணாது உயிர்காவலிட்டு உடலிற் பிரியாப் புலனைந்தும் நொந்து வாடுவதன்று தவம்; அவாவற்று தங்கள் தங்களுக்குரிய காரியங்களைச் செய்வோரே தவம்புரிவோராவர்.

"தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார்; மற்றல்லார்
அவஞ்செய்வார் ஆசையுட் பட்டு."

என்பது குறள்.

"மழித்தலும் நீட்டலும் வேண்டா; உலகம்
பழித்த தொழித்து விடின்."

என்றும் திருக்குறள் வற்புறுத்துகின்றது.

உலகம் எதனைப் பழிக்கும் என்றால்,

"ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை; இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி"

என்று கூறி ஒழுக்கத்தினின்று இழுக்குவதையே உலகம் பழிக்கும் என்று திருக்குறள் அறிவுறுத்துகின்றது. இனி, அவரவர்க்குரிய காரியங்கள் எவை என்னும் வினவிற்கு இருநூல்களும் ஒரேவிதமாக விடை பகர்கின்றன.

பிறப்பொழுக்கமே செயற்குரியது; தானம் தவம், வேள்வி முதலியவை அவ்வொழுக்கத்

திற்கு அங்கங்களாக அமைவனவேயாகும். திருக்குறளாசிரியர் உதாரணங் காட்டுகிறார்: பிறப்பாலே பார்ப்பனனாகிய ஒருவனை எடுத்துக்கொள். அவன் வேதாத்தியயனஞ் செய்தல் வேண்டும். ஆனாலும் அவன் அத்தியயனஞ் செய்ய மறந்தாலும் பாதகமில்லை. அவனுடைய குலத்திற்கேற்ற நல்லொழுக்கம் இல்லையானால் அவனுக்கு அந்தண்மை இல்லாதுபோம்" என்கிறார்.

பகவான் சொல்கிறார்: "அர்ச்சுனா! உன்னையே உதாரணமாக எடுத்துக்கொள். வேந்தர்க்கு அறம் விளைபோரினும் மிக்க நலமில்லை. நீ இவ்வறப்போர் புரியாயென்னின் ஸ்வதருமத்தைக் கைவிடுத்த பாபியாய்ப் பழிக்கப் பெறுவாய்.

स्वधर्ममपि चावेक्ष्य न विकम्पितुमर्हसि ।
धर्म्याद्धि युद्धाच्छ्रेयोऽन्यत्क्षत्रियस्य न विद्यते ॥ 2-31.
अथ चेत्त्वमिमं धर्म्यं संग्रामं न करिष्यसि ।
ततः स्वधर्मं कीर्तिं च हित्वा पापमवाप्स्यसि ॥

இவ்வாறு கர்ம பக்தி ஞான யோகங்களின் உண்மைகளை யெல்லாம் திருக்குறளாசிரியரும் ஸ்ரீ கீதைக்கு ஏற்ற விதமாகவே விவரிக்கின்றார்.

இனி, கீதோபதேசம் எழுந்த சந்தர்ப்பத்தை நோக்குவோம். குருக்ஷேத்திரமென்னும் போர்க்களத்திலே பாண்டவசேனையும் கௌரவசேனையும் எதிரெதிராக அணிவகுத்து நிற்கின்றன. கௌரவ சேனாபதியான பீஷ்மாசாரியார் துரியோதனனுக்கு

உற்சாக மூட்டுவதற்காகச் சிங்கநாதஞ் செய்கிறார். சைனிகர் அனைவரும் ஒருமிக்க சங்கநாதஞ் செய்கிறார்கள். எதிர்ப்புறத்திலே தேரிலிருந்த கண்ணனும் அர்ச்சுனனும் சங்கநாதஞ் செய்கிறார்கள். பாண்டவசேனையும் ஆர்ப்பரிக்கின்றது. போர் தொடங்கிவிட்டது என்னலாம். அப்பொழுது அர்ச்சுனன் ஒரு காட்சி காண்கிறான். போர்க்களம் பெரும் மயானமாகப் போவதைக் காண்கிறான். வெற்றி தங்களுக்கே என்றாலும் அதனாலே கிடைக்கும் அரச போகங்கள் படுகளத்து ரத்தத்திலே தோய்ந்ததாகவே இருக்குமன்றோ! துன்பம் பெரிதும் கலந்த அத்தகைய இன்பத்தை அவன் விரும்பவில்லை. "பலன் இப்படியானால் ஏன் போர் செய்யவேண்டும்?" என்ற எண்ணம் பலப்பட்டு விடுகின்றது! "போர் புரியேன்" என்று வில்லை நழுவவிடுகிறான். "கண்ணா! நான் மதிமயங்கித் தவிக்கிறேன். நான் என்ன செய்யவேண்டும் என்று எனக்கு உபதேசஞ் செய்" என்று அடி வணங்கித் தொழுகிறான். உபதேசம் தொடங்குகின்றது. "ஒவ்வொருவரும் தத்தமக்குரிய கடமைகளைச் செய்யவேண்டும். அதனாலே தனக்கு இன்பமோ துன்பமோ என்று யோசிக்கக்கூடாது. அவரவர்க்குரிய வேலைகளைச் செவ்வனே செய்து முடித்தால் மட்டுமே உலகம் அபிவிருத்தியடையும். அதற்காக ஈசுவரனே ஒவ்வொருவருக்குமுரிய கடமைகளை விதித்திருக்கிறார். பயனை விரும்பாது கடமைகளைச் செய்வதாலே சித்த சுத்தி ஏற்படும். பயனை விரும்பாவிட்டால் ஏன் காரியஞ் செய்யவேண்டும்

என்று எண்ணாதே. சித்த சுத்தியினால் உன்னுள் இருந்து உன்னை இயக்கும் ஆத்மாவே எல்லோருள்ளும் இருப்பதை உணர்வாய். அப்பொழுது அஹிம்ஸையும், மனச்சாந்தியும், ஊக்கமும், தொழிலியற்றும் திறமையும் எல்லாம் அதிகரிக்கும் ஸாத்விகம் தலையெடுக்கும். பரம்பொருளோடு நீ ஒன்றாகி விடுவாய்" என்பது பகவான் செய்த உபதேசத்தின் ஸாரம்.

இவ்வுபதேசம் நம்முள் ஒவ்வொருவருக்கும் வேண்டியதேயாம். துக்கக் கலப்பில்லாத சுகத்தையே நாம் ஒவ்வொருவரும் பெற விரும்புகிறோம். சுகதுக்கங்கள் காரியத்தின் பயனாக வருமாயின், அவை மாறி மாறியும் கலந்துமே வருவனவாம். காரியமே சுகரூபமாகிவிட்டால் துக்கக் கலப்பிற்கு இடமில்லை. வாழ்க்கை ஆனந்தமயமாகி விடும்.

இவ்வாறு வாழ்க்கையை இன்பமயமாக்கிக் கொள்வதற்கு இரண்டு மார்க்கங்களை பகவான் சிருஷ்டித் தொடக்கத்திலே காட்டினார் என்றும், ஸனகாதிகளுக்கு நிவிருத்தி மார்க்கத்தையும், மரீசி முதலானவர்களுக்குப் பிரவிருத்தி மார்க்கத்தையும் உபதேசித்தார் என்றும் ஸ்ரீ சங்கர பகவத் பாதர்கள் ஸ்ரீ கீதா பாஷ்யத்தின் தொடக்கத்திலே கூறியுள்ளார்கள். பிரவிருத்தி மார்க்கத்திலிருப்பவர்களுக்கு உபதேசமாக அமைந்தது ஸ்ரீ கீதை. அதுவே நிவிருத்தி மார்க்கத்தினருக்கும் 'உண்மையான நிவிருத்தி மார்க்கம் எது' என்பதை நிர்ண

யித்துக் காட்டுகின்றது. ஸனகாதிகள், பகவத் பாதர்கள், ஸ்ரீ ரமண மஹரிஷிகள் போன்ற சிலருக்குத்தான் நிவிருத்தி மார்க்கம் பொருத்தமுடையதாகும். மற்றவர்கள் அதன் புறச் சின்னங்களையும் அவற்றால் ஏற்படும் சிறப்பையும் கண்டு மயங்கி பிரவிருத்தி மார்க்கத்தினும் அது எளிதென்று நினைக்கக்கூடும். போர் செய்து சுற்றத்தாரையழிப்பதிலும் பிரும்ம ஞானியாகிப் பிச்சை புகுவதுமேல் என்றல்லவா அர்ச்சுனனுக்குத் தோன்றுகிறது. தலைமயிரை மழித்தோ சடையாகப் புனைந்து நீட்டியோ சிறப்புறுவதைவிட, "பிறர் பழியாத செயல்களைச் செய்து இல்லறம் நடத்துவது மேல்" என்பதை ஸ்ரீ கீதையைப் போலவே திருக்குறளும் வற்புறுத்துகின்றது. அறத்துப்பால் இல்லற வியல்பினை 20 அதிகாரங்களாக வகுத்துக் கூறுகின்றது. இல்வாழ்வான் தனக்காக வாழாது பிறர்க்காக வாழப் பழகுகிறான். பிரும்மசர்யம் வானப்ரஸ்தம், சன்னியாசம் ஆகிய ஆசிரமங்களிலுள்ளவர்களை உபகரித்துக் காப்பவனாகிறான். பிதரர், தேவர். அதிதிகள், சுற்றத்தார் இவர்களுக்குப் பிறகுதான் தன்னை வைத்துக்கொள்கிறான். மனைவி மக்களைத் தன்னுயிருக்கும் உயிராகக் கொள்வதினின்று பிறவுயிர்களையும் தன்னுயிரைப் போலவே பேணப் பழகுகிறான். தன்னலத்திலே தொடங்கிய வாழ்க்கை அன்புடைய வாழ்க்கையாக மாறுகின்றது. முன்பின் அறியாதவரிடமும் இவ்வன்பு பெருகுகின்றது. செல்விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருப்போனாகிறான். யாருக்கும் இன்

சொல்லே வழங்குவோனாகி அதனால் தனக்கும் இன்பமுண்டாவதைக்கண்டு, "இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ; வன்சொல் வழங்குவது" என்று பிறர் வன்சொற் கூறுவதைக் கேட்டு வியப்படைகிறான். செய்ந்நன்றி, நடுநிலை, அடக்கம், ஒழுக்கம், பொறை, ஈகை முதலிய ஸாத்விக குணங்கள் இவனிடம் அமைகின்றன. அழுக்காறு, வெஃகுதல், புறங்கூறுதல், வீண்பேச்சு, தீச் செயல் இவை இவனிடம் காணப்படுவதில்லை. எல்லாவுயிர்களிடத்தும் அருளுடையோனாகிறான். பிரவிருத்தி மார்க்கம் நிவிருத்தி மார்க்கத்தோடு ஒன்றுபடுகின்றது.

பொருட் செலவிட்டுச் செய்யும் வேள்வியினும் அஹிம்ஸா தருமத்தைக் கடைப்பிடித்து உயிர் வாழ்வதே பெருவேள்வியாகுமென்று அறிந்து உலகத்தோடு ஒத்து வாழ்கிறான். வாய்மை, கள்ளாமை, வெகுளாமை, இன்னாசெய்யாமை, கொல்லாமை முதலிய நற்குணங்கள் இவனிடம் நிலைபெறுகின்றன. யாக்கையும் இளமையும் செல்வமும் நிலையாதவை என்றுணர்ந்து நிலை பெற்ற பேரின்பத்தைப் பெற முயல்கிறான். இதுவே அறத்துப்பாலின் அதிகாரங்களின் அடைவு. ஸ்ரீ கீதை புகட்டுமுண்மைகளை இவ்வாறு அதிகார முறையிலே பாகுபடுத்திக் கூறினால் அவையெல்லாம் திருக்குறளாலே விளக்கமுறுகின்ற உண்மைகளாகவே அமையும் என்பதை ஸ்ரீ கீதையைக் கற்றோர் யாரும ஒப்புக்கொள்வார்கள். பதின்மூன்றாவது அத்தியாயத்திலே,

अमानित्वमदम्भित्वमहिंसा क्षान्तिरार्जवम् ।
आचार्योपासनं शौचं स्थैर्यमात्मविनिग्रहः ॥
इन्द्रियार्थेषु वैराग्यमनहंकार एव च ।
जन्ममृत्युजराव्याधिदुःखदोषानुदर्शनम् ॥
असक्तिरनभिष्वंगः पुत्रदारगृहादिषु ।
नित्यं च समचित्तत्वमिष्टानिष्टोपपत्तिषु ॥
अध्यात्मज्ञाननित्यत्वं तत्त्वज्ञानार्थदर्शनम् ।
एतज्ज्ञानमिति प्रोक्तमज्ञानं यदतोऽन्यथा ॥

என்று ஞானத்தின் இலக்கணங்கள் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன.

குறிப்பு :—" नैष्कर्म्यसिद्धिं परमां सन्यासेनाधिगच्छति " (18-49) என்று சொல்லப்பட்டதின் பரம தாத்பர்யமான சன்யாசமும் (ஞானயோகமும்) குறளில் அறத்துப்பால் 25-வது அதிகாரத்தில் துறவியலில் சொல்லப்பட்டிருக்கிறது என்பதும் கவனிக்க வேண்டிய விஷயம். இதனால் கர்மயோகம், பக்தியோகம், ஞானயோகம் என்கிற ஆசார்யரின் சித்தாந்தம் முற்றிலும் குறளில் கூறப்பட்டிருக்கிறது என்பது நன்று விளங்கும்.

முடிவாக, சிற்றறிவினிற் சிறந்து தம்மைத் தாமே சதுரர் என்று மதித்து அலங்கரிக்குஞ் சிலர் உபயவேதங்களிலும் அவ்வவர்களுக்கு ஏற்ற முறையிலே ஸர்வஜ்ஞனாலே பாகுபடுத்தப்பட்ட விதிகளைத் திருத்தியமைக்கமுயல்வதை ஸ்ரீ கீதையும் திருக்குறளும் ஏக கண்டமாய்க் கண்டிப்பதையும் இங்குக் குறிப்பிடுவது பொருத்தமாகும் என்றே அதனையுங்கூறி என் பேச்சை இம்மட்டோடு நிறுத்திக் கொள்ளுகிறேன்.

सक्ताः कर्मण्यविद्वांसो यथा कुर्वन्ति भारत ।
कुर्याद्विद्वांस्तथाऽसक्तश्चिकीर्षुर्लोकसंग्रहम् ॥
न बुद्धिभेदं जनयेदज्ञानां कर्मसंगिनाम् ॥

என்று பகவான் உபதேசிக்கிறார். ஒருவன் தானே சிறந்த அறிவாளி என்று நினைத்துக் கொள்ளுகிறான். ஆனால் அவனுடைய அறிவு எதற்குப் பயன்படுகின்றது? தனக்கென்று விதிக்கப்பட்ட விதிகளை மீறி நடந்து அவ்வாறு மீறி நடந்து கொண்டது சரியே என்று தன் மனத்தைச் சாந்தப்படுத்த முயல்வதற்கே பயன்படுகின்றது. மேலும் "மற்றவர் அனைவரும் அறிவிலிகள்; அவர் செய்யுங் காரியங்களெல்லாம் மடமை மிகுந்தவை" என்று அவர்களுக்கு அறிவுறுத்தி அவர்களைச் சீர்திருத்த முற்படுகிறான்.

"ஏதிலார் குற்றம்போற் றங்குற்றங் காண்கிற்பிற்
றீதுண்டோ மன்னு முயிர்க்கு"

என்கிறார் திருவள்ளுவர். அவனுடைய அறிவைக் கண்டு வியந்து பொதுமக்கள் தங்களுக்குரிய செயல்களிலே ஈடுபடா தொழிகிறார்கள். ஆகையால், "நான் செய்யவேண்டிய காரியம் ஒன்றுமில்லை; நான் நித்ய முக்த சுத்த சத்துவப் பொருள்; எனக்குக் காரியங்களைச் செய்வதாலாகும் பயனிலே விருப்பமில்லை" என்று சும்மா இராதே;

न मां कर्माणि लिंपन्ति न मे कर्मफले स्पृहा ।

என்ற அறிவுடன் மோக்ஷத்தை விரும்பிய முன்னோர்கள் தத்தமது கருமங்களைச் செய்தார்கள்.

न मे पार्थास्ति कर्तव्यं त्रिषु लोकेषु किंचन ।
नानवाप्तमवाप्तव्यं वर्त एव च कर्मणि ॥

அர்ச்சுனா! நீயும் கருமப் பயனைப் பெற விரும்பாமலே உனக்கிடப்பட்ட காரியங்களைச் செய்யவேண்டும் உன் அறிவைக் கொண்டு வாலறிவனாலே விதிக்கப்பட்ட தருமங்களை மாற்றியமைத்துக் கொள்ளாதே.

"உலகத்தோ டொட்டவொழுகல் பலகற்றுங்
கல்லார் அறிவிலா தார்."

புறச்செயல்கள் அல்ல ஒருவனுடைய அறிவாற்றலை விளக்குவன. பேரறிவாளனுடைய உள்ளத் தூய்மையும், உண்மைத் துறவும், அவன் புறச்செயல் ஒவ்வொன்றிலும் பிரதிபலித்து அச்செயல் அறிவிலார்களின் செயலை ஒத்திருப்பினும் சிறப்புற்று விளங்கி, அத்தகைய தூய்மையும் துறவும் பொதுமக்களிடம் பரவுவதற்கு உதவும். விதித்த காரியத்தைச் செய்யாமற் சும்மா இருந்தால், பொதுமக்களும் "நாமும் ஞானிகள்; நாங்களும் யாதொன்றும் செய்யவேண்டியதில்லை" என்று சோம்பித்திரிவார்கள். அவர்களுடைய புத்தியைக் கெடுத்து, அவர்களையும் கெடுத்தவனாகாதே என்று, மெய்ஞானமில்லாத போலி ஞானிகளுக்கு, அர்ச்சுனனுக்கு உபதேசிக்கு முறையிலே எச்சரிக்கை கூறுகின்றது ஸ்ரீ கீதை. திருக்குறளும் இக்கீதோபதேசத்தையே வற்புறுத்துகின்றது.

Thompson & Co., Ltd., Madras.

யதீஸ்வராளின் மஹிமையும் க்ருஹஸ்தனின் கடமையும்

गुरुर्ब्रह्मा गुरुर्विष्णुः गुरुर्देवो महेश्वरः ।
गुरुस्साक्षात्परं ब्रह्म तस्मै श्रीगुरवे नमः ॥

குருவே ப்ரஹ்மா குருவே விஷ்ணு குருவே மஹேச்வரனுகிய தேவன். குருவே ஏகமாகிய பரப்ரஹ்மம். (ஆதலால்) அத்தன்மைய ஸ்ரீகுருவிற்கு நமஸ்காரம்.

जन्तूनां नरजन्म दुर्लभमतः पुंस्त्वं ततो विप्रता
तस्माद्वैदिक धर्ममार्ग परता विद्वत्वमस्मात्परम् ।
आत्मानात्म विवेचनं स्वनुभवः ब्रह्मात्मना संस्थितिः
मुक्तिर्नो शतजन्म कोटि सुकृतैः पुण्यैर्विना लभ्यते ॥

பிராணிகளுள் மனிதராகப் பிறத்தலரிது. மனிதராய்ப் பிறந்தாலும் ஆணுகப் பிறத்தலரிது. ஆணுய்ப் பிறந்தாலும் பிராம்மணனுகப் பிறத்தலரிது. அதினிலும் வைதீகதர்ம மார்க்கத்தில் ஆசையுள்ளவனுக இருத்தலரிது. அதினிலும் வித்வானுகவிருத்தலரிது. வித்வானுகயிருந்தாலும் ஆத்மானுத்ம ஞானத்தோடும் அந்த ஞானத்துக்குத் தக்கபடி அனுபவத்தால் அடையப்பெறும் ப்ரஹ்மஸாக்ஷாத்காரத்தில் மனத்தை நிறுத்திய ஸந்யாஸிகளாகயிருந்து முக்தியையடைதல் அரிதினுமரிது. இது அநேக நூறுகோடி நற்காரியங்களும் புண்ணியங்களுமின்றி சித்திப்பதில்லை என்பதாக ஸ்ரீமத் ஆதி சங்கர பகவத் பூஜய பாதாள் விவேக சூடாமணியில் கூறியிருக்கிருர்கள்.